**அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியம் - 2014**

---

அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையிலும் வருமானக்கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை தீர்மானிக்க என்னால் முடியாதுள்ளேன்.

# 2 நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டு கொள்கைகள் (பெறுமானத்தேய்வு கொள்கை தவிர) வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 4,723,618 தொகையான மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் பற்றுச்சீட்டு வருமானம் ரூபா 8,000 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தொலைபேசி கோபுர வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்த காரணத்தினால் 05 கோபுரங்களுக்காக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 968,000 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2014 செப்தம்பர் 01 ஆந் திகதி இருந்து 06 வருடங்களுக்காக தனியார் தொலைபேசி கம்பனியுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் இணக்கப்பாட்டின் பிரகாரம் கிடைத்த மாதாந்த தவணை மற்றும் முற்பணத் தொகையான ரூபா 2,080,000 தொகை, வருமானமாக கணக்கீடு செய்தமையால் ஆண்டின் வருமானம் ரூபா 1,813,334 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு ரூபா 526,660 தொகை மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்பு ரூபா 138,144 மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு ரூபா 34,536 தொகை வருமானச் செலவின கணக்கில் செலவினமொன்றாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் நிலுவை பங்களிப்பு ரூபா 74,254 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(எ) அறவிடப்படாத சம்பள முற்பணம் ரூபா 49,720 தொகை கிடைக்க வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 4,501,000 கூட்டுப்பெறுமதியான 02 வருமான விடயங்கள் தொடர்பாக பற்றுச்சீட்டுக்கள், வருமான பதிவேடுகள் மற்றும் செல்லுபடியான குத்தகை உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) ரூபா 347,479,500 கூட்டுப்பெறுமதியான ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பேரேட்டுக் கணக்குகள், பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு என்பன பேணப்படாதிருந்தமையால் கணக்காய்வின் போது சரியானதன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

(இ) நடைமுறையல்லாத பொறுப்புக்கள் ரூபா 347,526,326 தொகை தொடர்பாக பேரேட்டுக் கணக்குகள் மற்றும் அட்டவணைகள் என்பன பேணப்படாதிருந்தமையால் கணக்காய்வின் போது சரியானதன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியன் சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டம் | |
| | 3 (2) பிரிவு | பொறுப்புச் சபைக்காக பிரிவில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் 10 ஆம் பிரிவின் 2 ஆவது உப பிரிவு | மாதத்தின் இறுதி திகதியில் உள்ளவாறு அல்லது அத்திகதிக்கு முன்னர் பங்களிப்பு தொகையை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட ரூபா 231,400 ஆன பங்களிப்புத் தொகை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | i நிதிப்பிரமாணம் 395(ஈ) | ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 756 | வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க திறைசேரி பிரதி செயலாளரின் சுற்றறிக்கையின் | |
| | 4.3 பிரிவு | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் திரண்ட நிதியத்தின் மாற்றங்கள் காட்டும் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | அமைச்சினால் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 430,211 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,928,833 ஆக காணப்பட்டதால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,359,044 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.2 வருமான நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 10.5 செலவினமொன்றை மேற்கொண்டு நிர்மாணிக்கப்பட்ட 02 சுற்றுலா விடுதிகள் நிதியத்திற்கு சொந்தமாக காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 25,000 ஆக இருந்தது. கவர்ச்சிகரமான சுற்றுப்புற காட்சிகளுடன் அமைந்துள்ள இவ்விரண்டு சுற்றுலா விடுதிகளுக்காக விரிவான விளம்பரமொன்றை வழங்கி சுற்றுலா பயணிகளை கவர்வதன் மூலம் அதன் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 10.0 மில்லியன் பெறுமதியான செலவினமொன்றில் நிர்மாணிக்கப்பட்ட மாநாட்டு மண்டபமொன்று நிதியத்திடம் காணப்பட்ட போதும் மீளாய்வாண்டிலும் ஒரு மாநாட்டையேனும் நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் ii ஆம் பகுதியின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பில் சேவை புரியும் அனைத்து ஊழியர்களுக்கும் பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்கு நிறுவனம் கடப்பாட்டினைக் கொண்டிருந்த போதும் மீளாய்வாண்டில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட மூன்று ஊழியர்களிடமிருந்து பங்களிப்புத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.2. இனங்காணப்பட்ட நட்டங்கள்

மீளாய்வாண்டில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக 2013 ஆம் ஆண்டின் பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்கு தாமதமாகியமையால் ரூபா 42,204 ஆன மிகை கட்டணமொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 செயலாற்றல்

2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (அ) முதல் (க) வரையான 20 நோக்கங்களில் 4 விடயங்கள் தவிர ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியம் எவ்வித நடவடிக்கையொன்றையும் எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1. தீர்வுசெய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பொது நம்பிக்கையாளரினால் பேணப்படும் பேரேட்டின் பிரகாரம் அம்புலுவாவ நம்பிக்கை நிதியத்திற்காக முன்னைய ஆண்டுகளில் மூலதன செலவினத்திற்காக ரூபா 2,600,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் அச்செலவினம் இனங்காணப்பட்டு நிதியத்தினால் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) வருமான நிர்வாகம்

(ஆ) கணக்கீடு

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் நிர்வாகம்